**03.09.2020**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் வருகின்ற 07.09.2020 முதல் மீண்டும் துவங்குகிறது**

**கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கடைபிடிக்கப்பட்ட பொது முடக்கத்தினால் சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் கடந்த 22.03.2020 முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் வருகின்ற 07.09.2020 அன்று காலை 8 மணி முதல், தளர்வு 4.0 விதிமுறைகளின் படி கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின் படி இயக்கப்பட உள்ளன.**

**மெட்ரோ இரயில் சேவைகள்:**

- மெட்ரோ இரயில் சேவைகள் தொடக்கத்தில் காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை இயக்கப்படும். பின்பு தேவையின் அடிப்படையில் நேர மாற்றம் செய்யப்படும்.
- சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மெட்ரோ இரயில் சேவைகளை பின்வரும் இரண்டு நிலைகளில் இயக்கவுள்ளது.
  - ✓ **நீல வழித்தடம்** - விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையம் மற்றும் வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையம் இடையே 07.09.2020 திங்கட்கிழமை முதல் உச்ச நேரங்களில் (Peak Hours) (காலை: 08.30 மணி முதல் 10.30 மணி வரை மற்றும் மாலை: 05.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை) 5 நிமிட இடைவெளியிலும் மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியிலும் இரயில்கள் இயக்கப்படும்.
  - ✓ **பச்சை வழித்தடம்** - பரங்கிமலை மெட்ரோ மற்றும் புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இடையே 09.09.2020 புதன்கிழமை முதல் உச்ச நேரங்களில் (Peak Hours) (காலை: 08.30 மணி முதல் 10.30 மணி வரை மற்றும் மாலை: 05.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை) 5 நிமிட இடைவெளியிலும் மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியிலும் இரயில்கள் இயக்கப்படும்.
- புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து கோயம்பேடு வழியாக விமான நிலைய மெட்ரோ செல்லும் நேர் வழித்தட மெட்ரோ இரயில் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எனவே பயணிகள் ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் மாறி விமான நிலைய மெட்ரோ செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- பயணிகளின் பாதுகாப்பிற்காக அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்கள் அடிக்கடி கிருமி நாசனி மூலம் சுத்தம் செய்யப்படுகிறது.
- மெட்ரோ இரயில் நிலைய நடைமேடைகளில் பயணிகளின் வருகை, வெளியேறுதல் மற்றும் தனிமனித இடைவெளியை கண்காணிப்பதற்காக தேவையான ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- தூய காற்றின் சுழற்சியை அதிகரிக்கவும் மற்றும் தனிமனித இடைவெளியை பின்பற்றி பயணிகள் மெட்ரோ இரயில்களில் ஏறவும், இறங்கவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் மெட்ரோ இரயில்கள் நிறுத்தப்படும் நேரம் 20 வினாடிகளிலிருந்து 50 வினாடிகளாக உயர்த்தப்பட்டுள்ளது.
- நடைமேடையில் காத்திருக்கும் போதும் இரயிலில் பயணிக்கும் போதும் பயணிகள் 6 அடிதூர இடைவெளியை கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- அனைத்து மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலைய நடைமேடைகளில் பயணிகள் பயன்படுத்தும் மற்றும் காத்திருக்கும் இடங்களில் தனிமனித இடைவெளி குறித்த “X” குறியீடுகள் வைக்கப்பட்டுள்ளன. பயணிகள் அனைவரும் இந்த குறியீடுகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**மெட்ரோ இரயில் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்:**

- மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் நுழைவதற்கு அனைத்து பயணிகளும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.
- மெட்ரோ இரயில் நிலைய நுழைவுவாயில்களில் அனைத்து பயணிகளுக்கும் உடல் வெப்பநிலை பரிசோதனை செய்யப்படும்.
- பயணிகளில் எவருக்கேனும் கொரோனா அறிகுறி அல்லது அதிக உடல் வெப்பநிலை இருந்தால் அவர்கள் மெட்ரோ இரயில் சேவையை பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- பயணிகளை கையாளும் ஊழியர்களுக்கு முகக்கவசம், கையுறைகள் மற்றும் பாதுகாப்பு உடை (PPE) போன்றவை வழங்கப்பட்டுள்ளன.
- ஆரம்பத்தில் மெட்ரோ இரயில் நிலையங்களில் இரண்டு நுழைவுவாயில்கள் திறக்கப்படும். மெட்ரோ இரயில் நிலையங்களின் பிற நுழைவுவாயில்கள் பயணிகளின் தேவைக்கேற்ப திறக்கப்படும்.
- **கை சுத்திகரிப்பான்:** அனைத்து மெட்ரோ இரயில் நிலைய நுழைவுவாயில்களிலும் காலால் இயக்கப்படும் தானியங்கி கை சுத்திகரிப்பான் இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது.
- அனைத்து பயணிகளும் மெட்ரோ இரயில் நிலைய நுழைவுவாயில்களில் வைக்கப்பட்டுள்ள கை சுத்திகரிப்பான்களில் தங்களது கைகளை சுத்தப்படுத்திக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

- ஒரே நேரத்தில் 2 முதல் 3 நபர்கள் மட்டுமே மின்தூக்கியை பயன்படுத்த வேண்டும், மேலும் வயதானவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மட்டுமே மின்தூக்கியை பயன்படுத்த அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- பயணிகள் தனிமனித இடைவெளியை கடைபிடிக்க நகரும் படிக்கட்டுகளில் ஒரு படி விட்டு இன்னொரு படியில் நிற்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- வழக்கம் போல பயணிகளும், பயணிகள் கொண்டுவரும் பொருட்களும் சோதனைக்கு உட்படுத்தப்படும். பயணிகள் குறைந்தபட்ச பொருள்களுடன் பயணிக்கவும், உலோகப் பொருட்களைத் தவிர்க்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களில் குளிர்சாதன வசதியை இயக்க மத்திய பொதுப்பணித் துறை மற்றும் இந்திய குளிர்சாதன அமைப்பால் (ISHRAE) பரிந்துரைக்கப்பட்ட நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. எனவே பயணிகள் எவ்வித பயமும் இன்றி மெட்ரோ இரயில்களில் பயணம் செய்யலாம்.
- திறன்பேசி (Smart Phone) உள்ள பயணிகள் ஆரோக்ய சேது செயலியை பதிவிறக்கம் செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- மெட்ரோ இரயில் நிலையங்களில் மக்கள் உபயோகிக்கும் அனைத்து பகுதிகள், மின்தூக்கி பொத்தான்கள், நகரும் படிக்கட்டுகள் போன்ற அனைத்து இடங்களும் அடிக்கடி கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்யப்படும்.
- மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள பொது கழிப்பறைகளை அடிக்கடி சுத்தம் செய்தல் மற்றும் கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்வதில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.
- அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் பயணிகளின் வாகனங்களை நிறுத்துவதற்கான வசதி உள்ளது.
- தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள கடைகள், தானியங்கி வசதியுள்ள நிலையங்கள் மற்றும் சிற்றுண்டியகம் திறக்கப்படும்.
- பயணிகளின் விழிப்புணர்வுக்காக தனிமனித இடைவெளி மற்றும் பாதுகாப்பான பயணம் குறித்து பதிவு செய்யப்பட்ட அறிவிப்புகள் மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் அவ்வப்போது வெளியிடப்படுகின்றன.
- அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் கண்காணிப்பு கேமரா மூலம் தனிமனித இடைவெளி கண்காணிக்கப்படும்.

**பயணச்சீட்டு வழங்குதல்:**

- மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள டிக்கெட் கவுண்டர்களில் பயண அட்டைகள் (Smart Cards) வழங்கப்படுவதுடன் மறுஊட்டம் (Recharge) செய்யப்படும்.

- பயணிகள் க்யுஆர் குறியீடு (QR Code) மூலமாகவும் பயணச்சீட்டை பெற்றுகொள்ளலாம்.
- மெட்ரோ இரயில் நிலையங்களில் பயண அட்டையை மறுஊட்டம் செய்வதற்காகவும் பயண அட்டையின் கால அளவை நீட்டிப்பதற்காகவும் பயணிகள் வரிசையில் நிற்பதைத் தவிர்க்க 32 மெட்ரோ இரயில் நிலையங்களிலும் பயண அட்டையை மறுஊட்டம் செய்யும் இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி ஏற்கனவே பெற்றுள்ள பயண அட்டையின் கால அளவை பயணிகள் நீட்டித்துக்கொள்ளலாம்.
- கொரோனா வைரஸ் பரவுவதைத் தவிர்க்க பணமில்லா பரிவர்த்தனைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. எனவே பயணிகள் பயண அட்டையை பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். பயண அட்டைக்கான மறுஊட்டத்தை (Smart card recharge) இணையதளம் மூலமாகவோ அல்லது பிற பணமில்லா பரிவர்த்தனைகள் மூலமாகவோ செய்துகொள்ளலாம்.
- ஒருவழி பயணச் சீட்டுகள் (Single Journey Tokens) ஊக்குவிக்கபடமாட்டாது; இருப்பினும், பயணிகளின் தேவை அடிப்படையில் சுத்தம் செய்யப்பட்ட டோக்கன்கள் வழங்கப்படும்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மேற்கொண்டுள்ள பயணச்சீட்டு வழங்கும் முறை மற்றும் அனைத்து விதிமுறைகளையும் பயணிகள் பின்பற்றி சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.